ஓம்
சிவமயம்



அபிராமி அஞ்சலி

சிவமயம்



அபிராமிப்பிள்ளை தில்லைநாதர்

அவதாரம்
23-01-1912

அமரத்துவம்
11-04-2004

<u>மறைவு நாள் வெண்பா</u>

சித்திரபானு வருட சித்திரை ஞாயிறு
நாள் பதின்னொன்றில், வருடம் ஈர் பத்து நான்கில்
அபிராமிப்பிள்ளை எனும் மாண்புமிகு மானிடத்தாள்
அம்மன் அடி சேர்ந்தார்

கடவுள் வாழ்த்து

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பன்னிரு திருமுறைகள்

1ம், 2ம், 3ம் திருமுறைகள் - திருஞானசம்பந்த நாயனார்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு, துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு, சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாய்யுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாத நாமம் நமச்சிவாயவே.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வ டிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன், மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

4ம், 5ம், 6ம் திருமுறைகள் - திருநாவுக்கரசு நாயனார்

சொற்றுணை வேதியன், சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

அப்பன் நீ அம்மை நீ, ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும்; தோற்றுவாய் நீ
துணையாய்யென் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறுர்ந்த செல்வன் நீயே.

காயமே கோயிலாகக், கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக, மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா, நிறையநீரமையட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

7ம் திருமுறை தேவாரம் - சுந்தரமூர்த்தி நாயனார்

பொன்னார் மேனியனே, புலித் தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே, மாமணியே, மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே, உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

8ம் திருமுறை - திருவாசகம் - மாணிக்கவாசகர்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

9ம் திருமுறை - திருவிசைப்பா திருவாலியமுதனார்

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய் காண அருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்சலிகள் பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக்கு அருளித் தேவன் ஆடுமே

9ம் திருமுறை - திருப்பல்லாண்டு - சேந்தனார்


பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச்சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

12ம் திருமுறை - திருப்புராணம் - சேக்கிழார் நாயனார்

உலகெ லாம்உணர்ந்து ஓதற்கு அரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

12ம் திருமுறை - திருப்புகழ் - அருணகிரிநாதர்

பத்தியால் நானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தினா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தாசற் குணநர்நேயா
ஒப்புலா மாமணிக் கிருவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே



சிவபுராணம்



நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

சிவபுராணம்



CYCLE OF BIRTH & DEATH

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

சிவபுராணம்

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்



பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

சிவபுராணம்

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



உலகநாதர் இயற்றிய உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே

மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்து இருந்தார் வாசல் வழிச் சேர வேண்டாம்
வனம் தேடும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்ந்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே

ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே

கல்வி
குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

தாளாண்மை
உறுபுலி ஊனிரை யின்றி ஒருநால்
சிறுதேரை பற்றியுந் தின்னும் - அறிவினால்
காற்றொழில் என்று கருதற்க கையினால்
மேற்றொழிலும் ஆங்கே மிகும்.

மேன்மக்கள்
இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர் விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினின் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

நட்பாராய்தல்
பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார் - பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தாரோ டியாத்த தொடர்பு.

தெளிவிலார் நட்பின் பகைநன்று சாதல்
விளியா அருநோயின் நன்றால் - அளிய
இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.



பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர் - வேண்டாம்
நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்
எமக்கென்? என்று இட்டு உண்டு இரும்.

சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே; மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்?



ஔவையார் இயற்றிய கொன்றை வேந்தன்

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
தீராக் கோபம் போராய் முடியும்.
சூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்.
தோழனோடும் ஏழைமை பேசேல்.
புலையும் கொலையும் களவும் தவிர்.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண்.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்.

அபிராமிபட்டார் அருளிய அபிராமி அன்னை துதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்

சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தான மும்
தாழாத கீர்த்தீயும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உத விப்பெரிய
தொண்ட ரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலும் மாயானது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுக பாணி!
அருள் வாமி அபிராமியே!

சித்தர் பாடல்கள்

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

அவனு மவனு மவனை யறியார்
அவனை யறியு மறிவானு மில்லை
அவனு மவனு மவனை யறியின்
அவனு மவனு மவனிவனுமே.


உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

(திருமூலர் சித்தர்)

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே!
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே!
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே!

கண்டவர்கள் ஒருக்காலும் விண்டிடார்களே;
விண்டவர்கள் ஒருக்காலும் கண்டிடார்களே;
கொண்டகோல முள்ளவர்கள் கோனிலைகாணார்;
கூத்தாடிக்கூத் தாடியே நீ யாடுபாம்பே!

(பாம்பாட்டிச் சித்தர்)



சித்தர் பாடல்கள்

நந்த வனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

(குயவன் - மறைபொருளான கடவுள்
தோண்டி- நீர்ப்பாண்ட சட்டி)

(கடுவெளிச் சித்தர்)

பூட்டைத் திறப்பதுங் கையா லே; மனப்
பூட்டைத் திறப்பது மெய்யாலே
வீட்டைத் திறக்க முடியா மல்விட்ட
விதியி தென்கிறார் ஞானப்பெண்ணே!

(மதுரை வாலைசாமி)


வஞ்சகம் அற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்
சஞ்சலம் ஏதுக்கடி-குதம்பாய்
சஞ்சலம் ஏதுக்கடி?

காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி-குதம்பாய்
கோலங்கள் ஏதுக்கடி?

மாத்தானை வென்று மலைமேல் இருப்போர்க்குப்
பூத்தானம் ஏதுக்கடி-குதம்பாய்
பூத்தானம் ஏதுக்கடி?

(குதம்பைச் சித்தர்)

உலகை நோக்கி - பாரதி




நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே
நீங்களெல்லாம் சொற்பனந்தானா?
பலதோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே
நீங்களெல்லாம் அற்ப மாயைகளோ?
உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே
நீங்களெல்லாம் கானலினீரோ?
வெருங் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற்
புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?
இந்த ஞாலமும் பொய்தானோ?

காலமென்றே யொருநினைவுங்
காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ?
அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர்
விதையிலென்றால் சோலை போய்யாமோ?
இதைச் சொல்லொடுசேர்ப்பாரோ?

காண்பவெல்லா மறையுமென்றால்
மறைந்த தெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே-நித்தம் விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே யுறுதிகண்டோம்,
காண்பதல்லா லுறுதியில்லை
காண்பது சக்தியாம்-இந்தக் காட்சி நித்தியமாம்.



அச்சமில்லை - பாரதி

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

துச்சமாக வெண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

பிச்சைவாங்கி யுண்ணும்வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

நஞ்சைவாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

பச்சை துணியணிந்தவேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

அன்பு செய்தல் - பாரதி

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டு புல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ?


பகைவனுக்கு அருள்வாய் - பாரதி

பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் -நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான்.

வெள்ளைத் தாமரை - பாரதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேலடி வாகிடப் பெற்றாள்.



வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்த்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்.

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைசாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
கெய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்.

நல்நெஞ்சே அமைதி கொள்வாய்! - கவிஞர் வி. கந்தவனம்

உறவொன்றின் பிரிவால் ஊண் உறக்கம் இன்றி
உருகியழும் நெஞ்சே ஒன்று உணரல் வேண்டும்
மறைவென்றோ இழப்பென்றோ மரணம் என்றோ
வையகத்தில் வானகத்தில் எதுவும் இல்லை
உறுசடமோ உயிரினமோ எதுவா னாலும்
உருமாறி ஒன்று இன்னொன்று ஆத லன்றி
அறிவியலில் தத்துவத்தில் அவைகள் முற்றாய்
அழிந்துவிடும் என யாரும் அறிந்த தில்லை!

நாடுமிடம் நண்ணுதற்கு வாக னங்கள்
நம்பிப்பல நாம் ஏறி இறங்கல் போல
வீடுதனை விரைவுடனே அடைவ தற்கு
விரும்புகின்ற ஆன்மாவும் வெவ்வே றான
கூடுகளை எடுக்கிறது வேளை கூடக்
குறித்த இடம் அடைகிறது தேடிக் கொண்ட
நீடுவினைக் கேற்பநிகழ் பயணந் தன்னில்
நிலையற்ற தரிப்பு இந்த நிலப்பி றப்பே!

ஆன்மாவுக் கழிவில்லை வயிற்றில் கொட்டி
அழுவதிலோர் பயனில்லை அதுதான் விட்ட
ஊன்மாவும் அழியாது மூட்டுந் தீயால்
ஊருமாறி ஒருபொழுதிற் சாம்ப ராகும்
தான்மேவும் பயணத்திற் சந்தித் தோரை
சமயத்தில் விட்டேகும் ஆன்மா வுக்காய்
ஏன்வீணே இயமனைப்போய்த் திட்டல் வேண்டும்
இறைவனையும் எடுத்தெறிந்து தூற்றல் வேண்டும்?

துயக்கம் அறும் உண்மைநிலை துலங்கல் கூடும்
  சுற்றியுள்ள இயற்கையினை உற்றுப் பார்த்தால்
இயற்கையிலே எதற்குமொரு விதியிருக்கு, ஆம்
  எல்லாமே விதிமுறையில் இயங்கல் வேண்டும்
இயற்கையதன் நியதிகளை மாற்றுஞ் சக்தி
  எதையுமுணர் மனிதனுக்கோ இன்னும் இல்லை
இயற்கையிலே மாற்றங்கள் நிகழும் ஆனால்
  எப்பொருளும் முற்றாக அழிவ தில்லை!

மாற்றத்தை மறைவென்றும் மரணம் என்றும்
  மயக்கமனி தன்கூறி மார டிப்பான்
ஏற்றத்தை இறக்கத்தின் மரணம் என்பான்
  இரவைப்போய்ப் பகற்பொழுதின் மரணம் என்பான்
தோற்றத்தின் மாற்றங்கள் சுழன்று சுற்றித்
  தொடர்கின்ற வாழ்க்கைமுறைச் சுறுசு றுப்பாம்
நேற்று இன்று நாளையிவைக் கப்பால் நிற்கும்
  நிகரில்லாச் சக்தியதன் நிர்வ கிப்பாம்.!
ஆதலினால் நல்நெஞ்சே அமைதி கொள்வாய்
  அன்புறவு விட்டுன்னை அகன்று மேலாம்
வேதமுதல் வீட்டின்பம் துய்க்கும் வேளை
  வேதனைநீ கொள்ளுவது வேண்டா வேலை
பாதைதடு மாறாமல் உலக பந்த
  பாசவலை வீழாமல் பகுத்த றிந்து
நீதிநெறி நின்றொழுகி நீயு முந்தன்
  நெடும்பயண நேர்வினைகள் முடித்து நிற்பாய்!

ஓம்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும்-உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும்-வளமேவும்
விரிந்த நடும் குன்றமும் நிலையென-மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட-அருள்வாயே

திருப்புகழ்

அந்த மகிழ்ச்சியை தமிழராகிய நாம் எல்லோரும் இழந்தோம். அதிலும் வடக்கு நாரந்தனையோ நீர்வளம், நிலவளம் அற்ற வரட்சியான இடம். அங்கேதான் "வாழ்வாங்கு வாழ்ந்து" நான்கு பெண்பிள்ளைகளையும் நல்வாழ்வு காண உழைத்த "பணிவிரதா பத்தினி", மாமி அபிராமிப்பிள்ளை. தான் பெற்ற மகன் போல அறுசுவை ஊட்டி என் கணவனைப் பேணினா. நான் கண்டதையும் அனுபவித்தையும் இரகசியமாக ரசித்து வந்தேன்.

நன்னீருக்கு பல வயல் கடந்து போய் ஸ்நானம் செய்து குடத்தில் நீர் சுமந்து வருவார். நேரம்-அவரேதான் கடிகாரம். "கைபட்டால் கைலாயம்" என்பார்கள். அவசரமே அவரின் வாழ்க்கை. ஆண்கள் செய்யும் வேலை எதையும் கூட பிறர்கை எதிர் பாராமல், உதவி கிடைத்தாலும் தானும் கூட உழைத்து நிறைவு ஆக்கும் உத்தமி. தான் புகுந்த குடியை குறைவின்றி உயர்த்த உழைத்தார்.

இரவில் வேலைக் கடுமையால் நித்திரை குறைந்ததால், பகல் கண் தூக்கம் கொள்ளும். அந்நிலையில் ஒரு நாள் அரிவாளால் கையில் பெருவெட்டு ஏற்பட்டது. பழஞ்சீலையால் சுற்றிச் சுற்றக் கட்டி விட்டு மீண்டும் அரிகிறார். தன் பணியில் ஓய்வின்றி உழைப்பார். குறையும் சொல்வதில்லை. அன்று பசுமாட்டுக்கென்று நுங்குக் கோளை சீவினார். கையையும் அப்படியே. பசும்பாலும் தீஞ்சுவை ஆனது.

நினைவுகள்

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ் வெவர் தீமையும் ஏற் கொள்ளார் - அன்றி
அருமையும் பாரார் அவமதிப்பும் கேளார்
தத்தம் கருமமே கண்ணாயினார்."

என்ற நீதி உரையின் இலக்கணமாக வாழ்ந்தார்.

எளிமையாக மிகத்துரிதமாகவே சமைப்பார்; ஆரோக்கியமான உணவு. "இந்த உடல் சலியாது. நெடுங்காலம் ஆரோக்கியமாக வாழ்வார்" என்று எண்ணுவேன். அப்படியே தூக்கம் கொள்ளக் கிடைத்தது. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்."

'சிவம்'



நினைவுகள்

மனிதனின் பிறப்பும் இறப்பும் பூர்வ புண்ணிய பலனால் ஏற்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான் . இதைத் தான் நாம் பூர்வ புண்ணிய பலன் என்று சொல்கின்றோம்.

நாரந்தனை வடக்கில் சைவவேளாங் குலத்தில் பிறந்தவர் தம்பு தில்லைநாதன். சரவணையூர் இராமலிங்க உடையார் (கட்டை உடையார்) புதல்வன் தம்பு, இவரின் மகன் தில்லைநாதன். இவர் சொந்த ஊரில் கல்விகற்று, பின் யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்கல்வி கற்று, அதில் கட்டிடக் கலைஞர் பதவி வகித்தவர். பின் இளவயதிலேயே இளைப்பாறி ஊர் வந்து விட்டார். இவருக்கு உதவியாக இவரின் வயதான தாய்தான் இருந்தார். இதை உணர்ந்து இனபந்துக்கள் இவருக்கு ஓர் துணை வேண்டுமென கரம்பனில் பிரபல வர்த்தகர் மயில்வாகனம் அவர்களின் கனிஷ்ட புத்திரி அபிராமி என்னும் அணங்கைத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அபிராமி மிகவும் நற்குணம் உடையவர். உறவுக்கென்றும் ஊருக்கென்றும் வாழ்ந்த ஓர் உத்தமி. மனதில் குறிப்பறிந்து உணவு வழங்கி மகிழ்வித்தவர். இவர் எனது அண்ணி. அண்ணி என்றால் அபிராமி அம்மையேதான். ஆத்தாளேதான். அண்ணி அபிராமியின் இழப்பு எங்கள் யாபேருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு.

இவவுக்கு நான்கு பெண்பிள்ளைகள் (பெண்குஞ்சுகள்). மூத்தவ புஸ்பராணி. இராமநாதன் கல்லூரியில் படித்து ஆசிரியராகப் பட்டம் பெற்ற பின் அதே கல்லூரியில் ஆசிரியராக படிப்பித்து ஓய்வு பெற்றவர். இவர் யாழ்ப்பாணத்தில் திடவீரசிங்கம் என்பவரைத் திருமணம் செய்தவர். மற்றவ இராசேஷ்வரி. இவர் சொந்த மைத்துனராகிய நமசிவாயத்தை திருமண்ம் செய்தவர்.

நினைவுகள்

மூன்றாவது பூம்பா. இவவும் ஓர் பட்டதாரி. இவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவகாந்தா என்பவரைத் திருமணம் செய்தவர். கடைசிப்பிள்ளை சாரதா. இவர் இலட்சுமிகாந்தன் என்பவரைத் திருமணம் செய்தவர்.

எனது அண்ணி அபிராமி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் திருவடிகளின் கீழ் என்றும் பேரின்பத்துடன் இருக்கவேண்டுமென இறஞ்சுதேயாகும்.

சாந்தி, சாந்தி, ஓம் சாந்தி.

சிவஞானம்
கனடா

நினைவுகள்

என் அம்மாவின் அன்பு நினைவுகள்

எனது வாழ்வின் முன்னேற்றத்தில் என்றும் கண்ணும் கருத்துமாக அன்பின் உறைவிடமாக இருந்தீர்கள். அப்பாவை இழந்த பின் கண்ணின் இமைபோல் காத்து எனக்கு வாழ்வு தேடித் தந்து விட்டதுடன் ஒய்வு எடுக்காது நான் கனடா வருமளவுக்கும் எனதும் எனது பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் இரவு பகல் கண்துஞ்சாது உழைத்துக்காத்து வழியனுப்பிவைத்தீர்கள். நான் இங்கிருந்துபோதும் அறிவுரைகள் கூறி ஆறுதல் கூறி என்னை நல்லபடியாக்கவும், எனது பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் அடையச்செய்யவும் ஊக்கம்மளித்தீர்கள். அம்மம்மா எங்கே என்று என் பிள்ளைகள் கேட்கிறார்களே நான் என்ன சொல்வது என்று அறியாது தவிக்க விட்டு காலன் கவர்ந்தானே தங்களை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மகள்

நினைவுகள்

அம்மம்மா

உன்னைப் பற்றி எழுதுவதென்றால்
என்னைப் பற்றி எழுதுவதாகும்

முதல் பதின்மூன்று வருடங்கள்
என்னை நான் அறியவில்லை
உன்னை நான் பிரியவில்லை

என்னில் தனி அன்பு வைத்து
எனக்கு மட்டும் கடமை வைத்து
விண்வெளி நீ சென்று விட்டாய்
எம் அணுக்களோடு கலந்து விட்டாய்

அ தொடக்கம், மீன் சோறும்
எங்கள் தோட்டமும், பேய் கதைகளும்
அம்மன் கோயிலும், அரவணைப்பும்

என் அழியா வடுக்கள்

குறைகள் இலா மானிடர் இலர்.
உனக்கு என்னை நோக்கில்
எக் குறையும் நான் அறியேன்

அம்மம்மா

உன்னோடு என்றைக்கும் எனக்கு போட்டி
உன் அன்பும், உழைப்பும்
தன்னம்பிக்கையும், சுய மதிப்பும்
என்னுள் வளர்த்திட
உன்னோடு என்றைக்கும் எனக்கு போட்டி

நினைவுகள்

அம்மம்மா

நெல் விதைத்தாய்
நீர் பாச்சினாய்
வயல் விளைவித்தாய்

கோழி வெட்டினாய்
விறகு வெட்டினாய்
சமைத்தாய், பகிர்ந்தாய்
விருந்தளித்தாய்

தைத்தாய்
உழைத்தாய்
தொழுதாய்

படித்தாய்
படிப்பித்தாய்
குடும்பம் ஆழுவித்தாய்


இறுதியில்
அமைதியாய்
அஸ்தமித்தாய்

தாயின் தாயே
உன் வாழ்வு
அர்த்தம் நிறைந்தது

கரம்பன், நாரந்தனை வரைபடங்கள்



கரம்பன், நாரந்தனை வரைபடங்கள்



தகவல்கள்

கரம்பன், நாரந்தனை
http://www.calle.com/world/CE/31/Narantanai.html
www.karampon.com
http://www.eelavar.com/jaffna/karampon/

கரம்பன் பற்றிய கட்டுரை - குவியம் இணைய இதழ் - புரட்டாதி/2003 - இதழ் 21 - www.kuviyam.com

நாரந்தனை மக்கள் ஒன்றியம்-தொ.பே: 416-742-1307
தென் கரம்பன் அபிவிருத்தி சமூகம்-தொ.பே: 416-439-0968

தமிழ்
www.tamil.net/projectmadurai
http://www.suratha.com/reader.htm
http://www.jaffnalibrary.com/tools/google.htm
http://www.natkeeran.ca/AJLinks/TMag/TamilMagazines06.html

சைவ சமயம்
http://www.shaivam.org/
http://www.himalayanacademy.com/
www.geocities.com/Athens/Crete/9810/
www.iskcon.org.uk/ ies/posters.html

<u>நன்றிகள்</u>

சிவபாதமடைந்த
அபிராமிப்பிள்ளை தில்லைநாதர் அவர்களின்
அஞ்சலியில் எம்முடன் பங்குகொண்ட
அனைத்து உள்ளங்களுக்கும்
எமது மறாவா நன்றிகள்.

நன்றிகள்



மயில்வாகனம் + முத்துப்பிள்ளை

- வி.ம்.ஆர் இராசலிங்கம் + நாகம்மா
- மீனாட்சி + தம்பிப்பிள்ளை
- பொன்னு + முத்தையா
- பொன்னம்பலம் + சந்தனம்
- இலகுப்பிள்ளை
- முத்தையா + தங்கரத்தினம்
- தம்பு + பத்மாவதி

அபிராமிப்பி

- சிவநாதர் / சிவம்
  - சிவஜா / இராம் இரஞ்சன்
    - சிந்துஜா
  - சிவாத்மன் / அயோமி
  - சிவகரன் / வாசுகி
  - சிவராமன் / கிருஷரந்தி
    - சிவசக்தி
    - அபிஷன்
  - சிவானுஜன்
- புஸ்பராணி / திடவீரசிங்கம்
  - கிருஸ்ணானந் / தர்சனிகா
    - அசாங்கி
    - தில்லினா
  - சுகந்தினி / சகந்தன்
    - சுபாஷினி
    - சாமினி
  - வித்தியா / வரதன்
    - யாதவன்
    - வருணன்
  - மஞ்சுளா / விசாகன்
    - விவேக்
    - மயூரன்
    - வினோதன்
  - திருக்குமரன்
- ரஞ் / சிவே
- சாந் / அரு
- ரவி / மங்
- ரகு / மாச
- றா / ஆன
- ரெ / பா
- ரே / ரவி

சாவழி

தம்பு + வள்ளியம்மை

- பொன்னம்மா + தம்பு
- சின்னம்மா + விசுவலிங்கம்
- திருநாவுக்கரசு + மங்கையர்கரசி
- தங்கக்குட்டி + பரமகுரு
- முத்தாச்சி + சுந்தரம்பிள்ளை
- பராசக்தி + பேரின்பநாயகம்

ளை + தில்லைநாதர்

- யேஸ்வரி / ிவாயம்
  - தன் / ரா
    - சாயிமிருதுளா
    - சிவஸ்தி
  - சிவம
    - வாகீஸ்வரன்
    - கார்த்திகா
    - அஜந்தன்
  - ாதன் / ்வரி
    - விகாஸ்
  - கவிதா
  - சியாமிளன்
  - வசந்
  - வினித்
  - வினோத்
  - ர்
    - இலக்கியா
    - சஜீவ்
- புனிதவதி (பூம்பா) / சிவகாந்தா
  - பிரதீப் அம்ர்நாத்
  - காயத்திரி பிரியதர்சினி
- இன்பராணி (சாரதா) / இலட்சுமிகாந்தன்
  - நற்கீரன்
  - துவாரகா
  - துளசிகா